இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 1.50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 380 ★ 1988 மார்ச் 18 வெள்ளிக்கிழமை



# இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக மட்டுநகரில் பலத்த எதிர்ப்பியக்கம்

**கிழக்கு மாகாணத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் இரத்தம் தோய்ந்த தாக்குதல்களை எதிர்த்து தமிழ் தேசிய இனத்தினர் பலத்த எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர்**

கடந்த மாதத்தில் கிழக்கு மாகாணத்திற்கு மேலும் இந்திய படைப் பிரிவுகள் புதிதாகக் குவிக்கப்பட்டு, தேடுதல்கள், இளைஞர்கள், யுவதிகளை கைது செய்தல், படுகொலைகள் சொத்து அழிப்புக்கள் பரந்த அளவில் இடம் பெற்று வருகின்றன.

எதிர்ப்பு இயக்கம் 'அன்னையர் முன்னணி' தொடுத்துள்ள சாகும் வரை உண்ணாவிரதத்தினைச் சூழ நடைபெற்று வருகின்றது. மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவிலில் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள திருமதி. டேவிட் அன்னம்மா உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு [பெப்ரவரி 11 ல்] 35 நாளாகின்றது. அவர் எந்நிமிடமும் இறக்கும் சாத்தியம் அதிகரித்து வருவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக மார்ச் 14 ம் திகதி கிழக்கு மாகாண தொழிற்சங்க கூட்டுக் குழு ஊர்வலங்களை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. 40 தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் மட்டுமன்றி மாணவர்கள், பெற்றோரும் பெரும் அளவில் இதில் கலந்து கொள்ளும் சாத்தியம் அதிகரித்து வருகின்றது. இதைத் தடுக்கும் பொருட்டு யூ. என். பி அரசாங்கமும் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளும் எதிர்ப் புரட்சி மந்திராலோசனைகளில் ஈடுபட்டுள்ளன.

இதற்கு முன்னர் மார்ச் 7 ம் திகதி இடம் பெற இருந்த பாடசாலை மாணவர்களின் நடை பவனி தடை செய்யப்பட்டதோடு மட்டுநகரின் 9 பாடசாலைகளில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலினால் மட்டுநகர் ஸ்தம்பித்தது.

## கோரிக்கை

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும், இந்தியப் படைகளும் உடன் யுத்த நிறுத்தம் செய்தல் வேண்டும். இந்திய அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்பதே அன்னையர் முன்னணியின் முக்கிய கோரிக்கை ஆகும்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தினை சமரசம் செய்து அவக்கத் தூண்டும் இந்தக் கோரிக்கைகளுக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆதரவளிக்கா விட்டாலும், இந்திய — இலங்கை ஆக்கிரமிப்பாளர்களில் இருந்து விடுதலை பெற தமிழ் தேசிய இனத்தினர் நடாத்தி வரும் போராட்டத்தினை பேணுவதோடு அதற்கு ஆதரவளிக்கும் படி இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றது.

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தினை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் காட்டுமிராண்டி ஆக்கிரமிப்பினைத் தொடுத்துள்ள இந்திய பிற்போக்கு ஆட்சியாளர்கள் சம்பந்தமாக எவ்வளவும் நம்பிக்கை வைக்க வேண்டாம்! என தமிழ் தேசிய இனத்தினரையும் விடுதலைப் போராளிகளையும் பு. க. கழகம் வேண்டுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 'அன்னையர் முன்னணியைச்' சூழ இடம் பெற்று வரும் பிரச்சார இயக்கமும்' தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் இராணுவத் தாக்குதல்களும் பரந்த இந்திய இராணுவ அடக்கு முறைகளினால் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட முடியாது போய் விட்டதை சுட்டிக் காட்டுகின்றது.

இந்தப் பிரச்சார இயக்கங்களில் ஈ. பீ. ஆர். எல். எப் ரெலோ, புளொட், ஈரோஸ் இயக்கங்களின் தலைவர்கள் இந்திய — இலங்கை உடன்படிக்கையினதும், ஜயவர்தன — காந்தி அரசாங்கங்களதும் ஆலவட்டங்களாக மீண்டும் வெளிப்பட்டுள்ளனர்.

## உபாயம்

இதற்கிடையே விடுதலைப் போராட்டத்தின் தலைமையை கொண்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களுடன் சமரசம் செய்யும் கை

★ 2 ம் பக்கம் பார்க்கவும்

## கீர்த்தி பாலசூரிய ஞாபகார்த்த நிதி

### ரூ. — 2,50.000

தோழர்களே, வாசகர்களே, நண்பர்களே,

தோழர். கீர்த்தி பாலசூரியாவின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கட்சி அபிவிருத்தி நிதிக்கு இதுவரை திரட்டப்பட்ட முழுத்தொகை ரூ. 67.261 ஆகும்.

இந்த நிதியை நிறைவு செய்வதற்குரிய கால அவகாசம் இரண்டு கிழமை மட்டுமே ஆகும். மார்ச் 31 ம் திகதிக்கு இடையில் இந்நிதியை நிறைவு செய்து வர்க்க எதிரிக்கும், அதன் ஏஜந்துகளுக்கும் பாரிய தாக்குதல் ஒன்றை தொடுக்கும் படி உங்களிடம் வேண்டுகின்றோம். தோழர். கீர்த்தி பாலசூரிய மார்க்சிசத்திற்கு அளித்த தலைசிறந்த பங்களிப்புக்களை மறுபிரசுரம் செய்யவும், அவைகளை பலமொழிகளில் மொழிபெயர்த்து உலகத் தொழிலாள வர்க்கத்திற்கு அளிப்பதற்கும், லியொன் ட்ரொட்ஸ்கியின் பெறுமதி வாய்ந்த புத்தகங்களை சிங்கள தமிழ் மொழிகளில் மொழி பெயர்த்து பிரசுரிக்கவும் இந்நிதியின் பெரும் பகுதி உபயோகிக்கப்படும். சமசமாஜக் கட்சியின் துரோகத் தலைமைகள் ட்ரொட்ஸ்கியின் புத்தகங்களை தொழிலாள வர்க்கத்தின் கையில் கிடைக்காது தடுத்து வைத்திருந்தனர்.

இத்துரோகிகள் ஸ்டாலினிஸ்டுகள், நவசமசமாஜிஸ்டுகள், முதலாளித்துவ மக்கள் கட்சியுடனும் சேர்ந்து அமைத்துள்ள மக்கள் முன்னணி தொழிலாள வர்க்கத்தையும் தமிழ் தேசிய இனத்தையும் இளைஞர்களையும் இரத்தக் களரியில் மூழ்கடிக்க அமைக்கப்பட்ட பொறியாகும். ட்ரொட்ஸ்கியின் ஒரு சிறந்த வாரிசான தோழர். கீர்த்தி பாலசூரிய தன் வாழ்க்கை பூராவும் இப்பொறியை தகர்த்து தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தை நிலைநாட்டுவதற்காக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும், அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தார். யூ. என். பி. அரசாங்கம் உட்பட முதலாளித்துவம் ஆயத்தப்படுத்தும் எதிர்ப்புரட்சி தயாரிப்புக்களை தோற்கடிக்க தொழிலாள வர்க்கத்தை மக்கள் முன்னணியில் இருந்து மீட்டு தொழிலாள வர்க்கத்தை முதலாளி வர்க்கத்திற்கு எதிராக சுயாதீனமாக அணி திரட்ட வேண்டும். தொழிலாள வர்க்கத்தை ட்ரொட்கிசத்தினால் ஆயுதபாணியாக்குவது தீர்க்கமானதாகும். தோழர்கள், லியொன் ட்ரொட்ஸ்கி, கீர்த்தி பாலசூரியாவின் புத்தகங்கள் இப்பணியில் முக்கிய பாத்திரத்தை வகிக்கும்.

கடந்த காலத்தில் இடதுசாரி புரட்சிகர வசனங்களை உச்சாடனஞ் செய்த பல மத்தியவாதிகள் யூ. என். பி அரசாங்கத்துடனும், மக்கள்

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

**தோழர். கீர்த்தி பாலசூரியாவின் ஞாபகார்த்தக் கூட்டம்**

மஹரகம நவமக மண்டபம்,
மார்ச் 26 பி. ப 4.30 மணி

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முன்னணியை நிராகரி!

## யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்ற தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமாக அணிதிரட்டு!

### பு. க. க அரசியல் குழுவின் அறிக்கை

தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவ கட்சிகளுடன் கட்டிப் போட்டு, அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் கடந்த நாட்களாக புதிய விதத்தில் முன்வைத்துள்ள மக்கள் முன்னணி வேலைத்திட்டங்களை நிராகரிக்கும் படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தை வேண்டுகின்றது.

இலங்கை மசமாஜக் கட்சியினதும், இலங்கை ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியினதும் துரோகத் தலைவர்கள் இந்திய காங்கிரஸ் அரசாங்கத்துக்கும், இலங்கை யூ. என். பி. அரசாங்கத்திற்கும் கடைகெட்ட ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். இதன் மூலம் இந்திய — இலங்கை உடன்படிக்கையையும் இந்தியப் படைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கொண்டு நடாத்தும் இரத்தம் தோய்ந்த ஆக்கிரமிப்பினையும் அங்கிகரிக்கின்றனர். இந்தத் துரோக அரசியல் ஒத்துழைப்பின் அடிப்படையில் முதலாளித்துவ ஐக்கிய அரசினை பராமரித்து பேணுவதே.

அத்தோடு யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதல்களை எதிர்த்து களத்தில் குதித்து வரும் இலங்கை — தமிழ் ஈழ தொழிலாள வர்க்கத்தினை சிறைப்பிடித்து, ஸ்தம்பிக்கச் செய்யும் பொருட்டு தாம் அரசாங்கத்திற்கு எதிராக 'போராடுவதாகக்' காட்டும் பம்மாத்து வேலைகளிலும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். இத்தலைவர்கள் முதலாளித்துவ ஸ்ரீலங்கா மக்கள் கட்சியுடன் இணைந்து 'ஐக்கிய சோசலிச கூட்டு' என்ற பேரில் இன்னுமோர் மக்கள் முன்னணியை சிருஷ்டித்துள்ளனர். காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களின் பேடிகளாக செயல்பட்டு வரும் குட்டி முதலாளித்துவ ஈ. பீ. ஆர். எல் எப், புளொட் இயக்கங்களையும் வலதுசாரி மத்தியவாத இயக்கமான நவசமசமாஜக் கட்சியையும் இணைத்த வண்ணம் இந்த முன்னணி விஸ்தரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் இரத்தம் தோய்ந்த இந்திய இராணுவ ஆக்கிரமிப்பையும் கொடூரமான அரச ஒடுக்குமுறையையும் பணுகின்ற வாழ்க்கைத் தரம், சௌக்கிய, கல்விச் சேவைகளை ஒழித்துக் கட்டும் புதிய அளவிலான தாக்குதலுக்கு யூ. என். பி. அரசாங்கத்திற்கு இத்தலைமைகள் வழி திறந்தனர். இன்று அத்தாக்குதல்களை எதிர்த்து 'போராடுவதாக காட்டப் பார்க்கின்றனர்.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் இரத்த தடாகங்களை சிருஷ்டிக்கும் வேளையில் அதனை எதிர்த்து தொழிலாள வர்க்கம் தலையிடுவதை தவிர்க்கும் பொருட்டு சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்கள் அரசாங்கத்தினுள் நிலை கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைமையுடன் கைகோர்த்துக் கொண்டனர். தமிழ் தேசிய இனத்துக்கு காந்தி அரசாங்கம் 'சலுகைகள்' பெற்றுக் கொடுத்துள்ளது என்ற பொய்யை சந்தைப்படுத்துவதன் மூலம் இந்த எதிரப்புரட்சி கைக்கூலி வேலையில் நவ மசமாஜக் கட்சியின் வலதுசாரி மத்தியவாதிகள் மட்டுமன்றி, அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கங்களின் இடதுசாரி மத்தியவாதிகளும் ஒன்றிணைந்துள்ளனர்.

இந்திய — இலங்கை பிற்போக்கு ஆட்சியாளர்கள் வடக்கு — கிழக்கு மாகாணங்களை இந்திய இராணுவத்தின் மூலம் ஒடுக்கி வரும் அதே வேளையில், இலங்கையின் இராணுவ — பொலிஸ் படைப் பிரிவுகள் ஏனைய மாகாணங்களில் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக அரச ஒடுக்கு முறையை தூண்டியுள்ளது.

அத்தோடு யூ. என். பி அரசாங்கம் தனது அரசியல் எதிர்ப்பாளர்களை கொல்ல 'பச்சைப் புலிகளை' பலப்படுத்தியுள்ளது.

உக்கிரம் கண்டு வரும் உலக ஏகாதிபத்திய நெருக்கடியின் மத்தியில் இலங்கை முதலாளித்துவத்தினாலும், உலக வங்கியின் கட்டளையினாலும் தீர்மானம் செய்யப்பட்ட புதிய தாக்குதல்களை தொழிலாள வர்க்கத்தின் மீது திணிக்க யூ. என். பி அரசாங்கம் மேற் குறிப்பிட்ட நிலைமைகளை சிருஷ்டித்த வண்ணம் முன்வந்துள்ளது.

பெரும் அளவிலான தொழில் வெட்டுக்களுடன் தொலைத் தொடர்பு திணைக்களத்தினை தனியார் முதலாளித்துவ கம்பனிகளிடம் ஒப்படைக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இத்தாக்குதல்களினுல் பொருளாதாரத்தின் முக்கிய துறையான தோட்டத்துறை தனியார் மயமாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றது. ஏனைய அரசாங்க துறைகளதும் நிலைமை இதுவே.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்தி அதிகரிக்கும் பணவீக்கம் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நாசமாக்கி உள்ளது. ஜனவரி மாதத்தில் மட்டும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 714 ஐ எட்டிற்று 2[illegible] புள்ளிகளால் அதிகரித்தது.

தொழிலாளர் வேலை நீக்கங்கள், சம்பள வெட்டுக்கள் சுரண்டல் அதிகரிப்புக்களை உக்கிரம் காணச் செய்ய தனியார் முதலாளிகள் ஆரம்பித்துள்ள தாக்குதல்கள் ரொபாக்கோ, மக்ஜிம், ஸ்கன்ஸ்கா, ஹேகப், றேலன்ட்ஸ் முதலிய இடங்களில் கதவடைப்புக்கள், தொழிற் சங்கத் தலைவர்களின் வேட்டைகள் வடிவில் வெளிவந்தன

இத்தாக்குதல்களின் பின்னணியில் இலங்கை முதலாளித்துவ அமைப்பின் உலக நெருக்கடியின் மத்தியில் வீழ்ந்துள்ள பெரும் நெருக்கடியாகும். இலங்கை முதலாளித்துவத்தின் உள்ளூர் கடன் 862 கோடி ரூபாக்கள். வெளிநாட்டுக் கடன் 7009 கோடி ரூபாக்கள். 1987 ல் மட்

★ [illegible]ம் பக்கம் பார்க்கவும்

# இந்திய இராணுவ. . .

★ முன் பக்கத் தொடர்ச்சி

யாலாகாத்தனமான நாலு வித முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்திய ஆகக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் காட்டிய எதிர்ப்பினையும், மக்கள் ஆதரவையும் இவ்வியக்கத்தின் தலைவர்கள் இந்திய முதலாளி அரசாங்கத்துடன் பேரம் பேத்துவ சுலதற்கான உபாயமாக்கிக் கொண்டுள்ளனர்.

போரை நிறுத்தி, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் படி அதன் தலைவர் வே. பிரபாகரன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதம் மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது. காந்தி விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை முழுமனே கையளிக்க வேண்டும் எனவும், பிற்போக்கு இந்திய — இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு அதை அமுல் செய்ய உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசிய இனத்தினரையும் அதன் ஒரு பிரிவான முஸ்லீம் மதத்தினரையும் சிங்கள குடியேற்ற வாசிகளையும் ஒருவருக்கொருவர் எதிராக தூண்டி விடும் வேலையில் இந்திய — இலங்கைப் படைகள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. இவற்றுக்கு விடுதலைப் புலிகளால் அரசியல் ரீதியில் பதிலளிக்க முடியாது உள்ளது சிங்கள குடியேற்ற வாசிகளை திரும்பவும் கிழக்கு மாகாண தில் குடியேற்றும் எரிச்சலூட்டும் நடவடிக்கைகளில் யூ. என். பி. அரசாங்கம் ஈடுபட்டுள்ளது இவர்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு இலங்கைப் படைகள் திரும்பவும் களத்தில் குதித்துள்ளன.

குட்டி முதலாளித்துவ தேசிய புரட்சிகர இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கம் தமது தேசிய விடுதலையின் பேரில் மட்டும் நடாத்தி வரும் தேசிய சிறப்புரிமைவாத அரசியலானது அந்த இயக்கத்தினை முதலாளித்துவ ரசுகளுக்கு இடையே சிறை வைத்துள்ளதோடு, தேசிய விடுதலை இயக்கத்தினை சமரசம் செய்யும் பொறியாகவும் மாற்றி உள்ளது. இந்து — முஸ்லீம் மத அடிப்படையில் தமிழ் தேசிய இனத்தினை பிரிக்கையிலோ அல்லது சிங்கள குடியேற்ற வாசிகளை கிழக்கு மாகாணத்தில் எரிச்சலூட்டும் விதத்தில் குடியேற்றுகையிலோ அந்த இரத்தம் தோய்ந்த விதிமுறைகளை தோற்கடிக்கும் பொருட்டு இச்சகல மக்கள் குழுக்களுக்கும் மதச் சார்பற்ற — ஜனநாயக வேலைத்திட்டத்தினை முன்வைக்க முடியாதுள்ளது. இதற்கு இந்த தேசிய சிறப்புரிமைவாத அரசியலே காரணம்.

வடக்கு — கிழக்கு மாகாணங்களின் இந்த அபிவிருத்திகளினுள் தமிழ் — ஈழ சிறீலங்கா தொழிலாள வர்க்கத்தின் ஒன்றிணைந்த தலையீடு அவசியமாகி உள்ளது. எனினும் இந்தியப் படைகளின் இரத்தப் தோய்ந்த ஆக்கிரமிப்புக்கும், தமிழ் விடுதலைப் போராளிகளின் படுகொலைகளுக்கும் பூரண ஆதரவு வழங்கும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் — இ. தொ. கா. — நவசமசமாஜ மற்றும் மத்தியவாத தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தின் இந்த ஐக்கியத்தைச் சிதறடிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர். இந்திய ஸ்டாலினிஸ்டுகளின் நடவடிக்கைகளும் இதே விதத்திலேயே அமைந்துள்ளது. இத்துரோகத் தலைவர்கள் காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களைப் பலப்படுத்துகின்றனர்.

கிழக்கு மாகாண மக்களின் எதிர்ப்பியக்கம், தொழிலாள வர்க்கம் தமிழ் தேசிய இனத்தின் தேசிய உரிமைகளின் பேரில் முன்நின்று யூ என். பி அரசாங்கத்தை வெளியேற்றி தமிழ் — சிறீலங்கா சோசலிச ஐக்கிய குடியரசுக்காகப் போராடுவதனையும் அவசியத்தினையும் சுட்டிக் காட்டுகின்றது.

யூ. என். பி. — காந்தி அரசாங்கங்களுக்கு முண்டு கொடுக்கும் சமசமாஜ — ஸ்டாலினிச — இ. தொ. கா. — நவசமசமாஜ அரசியலுக்கு எதிராக தலையிடுவது தீர்க்கமாகி உள்ளது. அதன் மூலம் தமிழ் விடுதலைப் போராளிகளின் பந்தோபஸ்தினையும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் காக்க புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணையும் படி வேண்டுகின்றோம்.

யூ என் பி. அரசாங்கத்தை வெளியேற்றி சிறீலங்கா உள்ளடங்கலான முதலாளித்துவ கட்சிகளுக்கு இடமளியாமல் சோலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடுவது புரட்சிக கட்சியின் முக்கிய பணியாகியுள்ளது. முதலாளித்துவ அரசினையும், சொத்து உறவையும் தொடர்ந்து காக்கும் பிற்போக்கு ஐக்கிய சோசலிச முன்னணியின் மக்கள் முன்னணி அரசியலை நிராகரிக்கும் படியும் நாம் தொழிலாள வர்க்கத்தை வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ரொட்ஸ்கிஸ்டுகளின் 1988 ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம் ஆரம்பம்

அமெரிக்க ட்ரொட்ஸ்கிச கட்சியான 'வேர்க்கஸ் லீக்' 1988 ஜனாதிபதித் தேர்தலுக்கு தனது வேட்பாளராக ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளியான எட்வின்னை நியமனம் செய்துள்ளது. வேர்க்கஸ் லீக் 'புலட்டின்' பத்திரிகையின் 'லேபர்' செய்தி ஆசிரியரான பரி போஸ்டர் உப — ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

வேர்க்கஸ் லீக்கின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம் புரட்சிகர முன்நோக்கின் அடிப்படையில் ஆரம்பமாகியுள்ளது. அனைத்துலக பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதி என்ற முறையில் அமெரிக்க தொழிலாள வர்க்கம், நெருக்கடிக்குள்ளாகி உள்ள முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக உலக சோசலிசப் புரட்சிப் பாதையில் பயணம் செய்தாக வேண்டி உள்ளது.

வேர்க்கஸ் லீக்கின் மத்திய குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் கூறுவதாவது: ''இல்ட்சோப இலட்சம் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அதிகரித்து வரும் வீடில்லாப் பிரச்சினை பஞ்சம், தொழிலின்மை, சமூக நிலைமையின் சீரழிவுகள், ஜனநாயக — குடியுரிமைகளுக்கு எதிரான தாக்குதல்கள் ஏகாதிபத்திய யுத்த ஆபத்துக்கள் எதனையும் இந்த இலாப முறைகளைக் கொண்ட அமைப்பினுள் தீர்த்து வைக்க முடியாது.

''முதலாளித்துவத்தின் சமூக உறவுகள் — உற்பத்திச் சாதனங்களின் தனியார் சொத்துடமையும் உலகம் போட்டி முதலாளித்துவ தேசிய அரசுகளாக பிரிக்கப்பட்டுள்ளமையும் மனித இனத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குப் பெரும் தடைக்கல்லாகி உள்ளன. உலக முதலாளித்துவம் தவிர்க்க முடியாத விதத்தில் பொருளாதார பொறிவு, பாசிசம் உலக யுத்தம் நோக்கி தள்ளப்பட்டு வருகின்றது.''

இப்பிரச்சினைகளுக்கும், நெருக்கடிக்குமான தீர்வு பற்றி குறிப்பிடுகையில் அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் இவ் விஞ்ஞாபனம் கூறுவதாவது; ''அனைத்துலக தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே இந்த பொருளாதாரப் பொறிவுக்கும் அணுவாயுத யுத்தத்துக்கும் ஒரு பதிலீட்டை வழங்க முடியும். அதுவே இலாப முறைக்கும், தேசிய அரசுகளின் எல்லைகளுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்கும். உலகளாவிய பொருளாதாரத்தினை ஒரு அமைதி மிக்க இணைந்த பாகமாக — உலகளாவிய திட்டமிடலை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஐக்கிய சோசலிச சமூகமாக மறுசீரமைக்கும்.

## இலக்குகள்

''சகல தொழிலாளர்களின் முன் நிலையிலும் நாம் 3 அடிப்படையான விடயங்களை முன்வைக்கின்றோம்:

(1) முதலாளித்துவத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் அனைத்து நாடுகளின் தொழிலாளர்களதும் அனைத்துலக ஐக்கியத்தினை சிருஷ்டிக்க வேண்டும். வர்க்க நனவு படைத்த தொழிலாளர்கள் சோவினிசம் இனவாதம், தேசிய பிளவுகளின் சகல உருவங்களையும் தொழிலாள வர்க்கத்தினுள் எதிர்த்து போராட வேண்டும் எமது எதிரிகள் ஜப்பான், தென் கொரியா, தாய்வான் அல்லது ஜேர்மன் தொழிலாளர்கள் அல்ல.

(2) தொழிற் சங்கங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிற் கட்சியை [Labour Party] கட்டி எழுப்பத் தொடங்குவதன் மூலம் முதலாளி வர்க்கத்தில் இருந்து அமெரிக்க தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும்.

நாற்றம் கண்டு போயுள்ள முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாள வர்க்கம் ஒரு அரசியல் போராட்டப் பாதையை கண்டாக வேண்டும். தொழிலாள இயக்கத்தின் அளப்பரிய சக்தியானது தொழிற்சங்க அதிகாரத்துவம் ஜனநாயகக் கட்சியுடன் கொண்டுள்ள கூட்டுக்களால் அரசியல் ரீதியில் அடிபணியச் செய்யப்பட்டுள்ளது.

(3) சாசலிசக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு தொழிலாளர் அரசாங்கத்துக்காகப் போராடு! இலாப முறையையும், உற்பத்திச் சக்திகளின் தனியார் உடமையையும் ஒழித்துக் கட்டாத வரை தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்கும் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு ஏற்பட்டு விடாது.''

'வேர்க்கஸ் லீக்' அடிப்படைக் கைத்தொழில்களையும் வங்கிகளையும் நஷ்ட ஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கவும் யும் ஒரு திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரத்தை நிறுவவும் போராடி வருகின்றது. பொருளாதார வாழ்க்கை விரல் விட்டு எண்ணக் கூடிய கோடீஸ்வரர்களுக்கன்றி உற்பத்தியாளர்களான தொழிலாள வர்க்கத்திற்கு சேவை செய்யும் விதத்தில் மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டும் எனவும் அது பிரச்சாரம் செய்கின்றது.

1988 ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் இன்றைய அனைத்துலக அரசியல் நிலையை விபரிக்கையில் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுவதாவது: 1930 ம் ஆண்டிலிருந்து அமெரிக்கா கண்டிராத பொருளாதார, சமூக சீரழிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. முதலாளி வர்க்கத்தின் நப்பாசையின் படி 'வாய்ப்புக்களின் இடமாக' விளங்கிய அமெரிக்கா பெரும்பான்மையினரின் அவலங்களின் இடமாகி உள்ளது. தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி காண்கின்றது. 15 ஆண்டுகளாக தொழிலாள வர்க்கத்தின் நிச ஊதியம் வீழ்ச்சி கண்டுள்ளதோடு இன்று அது 1962 ம் ஆண்டு மட்டத்தை அடைந்துள்ளது.

வேலையின்மை உலக மந்த நிலைக்கு பின்னைய நிலையை அடைந்துள்ளது. இதை ஜனநாயக, குடியரசு ஜனாதிபதி வேட்பாளர்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயமாகவும் கருதவில்லை. உற்பத்தி பக்டரி மூடு விழாக்கள் — பிற்ஸ்பேர்க், யங்ஸ்டன், டெட்ரொயிட், பிளினட் முதலிய கைத்தொழில் நிலையங்களை சீரழித்துள்ளன. மோட்டார் கைத்தொழில் உருக்கு, நிலக்கரி, மற்றும் கைத்தொழில்களில் பல இலட்சம் பேர் தொழிலகளை இழந்துள்ளனர். அத்தோடு தொழிலாளர்கள் புதிய தொழில்களுக்கு குறைந்த சம்பளங்களை ஏற்கும் படி நெருக்கப்படுகின்றனர்.

இலட்சக்கணக்கானோர் வீடின்றி தவிக்கின்றனர். இவர்களில் 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் குழந்தைகள். பனிக் குளிர் வீச்சுக்கள் பல நூறுபேரை பலி கொண்டு வருகின்றது. வீடற்றவர்களில் பலர் தொழில் புரியும் தொழிலாளர்கள். அற்ப சம்பளங்களுடன் முறையான வீடுகளை இவர்கள் பெற முடியாதுள்ளது.

உணவு குசினிகளும் அவசரகால குடியிருப்புக்களும் வளர்ந்து வருகின்றன. 'பொருளாதார மீட்சி' பற்றி றீகன் நிர்வாகமும், முதலாளித்துவ பத்திரிகைகளும் அறிவித்து 5 ஆண்டுகளின் பின்னரே இவை இடம் பெறுகின்றன. இவற்றோடு குழந்தைப்பிள்ளை மரணங்கள் மூன்றாம் உலக நாடுகளின் மட்டத்தை எட்டிக் கொண்டுள்ளது.

## முரண்பாடுகள்

அமெரிக்க சமுதாயத்தின் வர்க்க முரண்பாடுகள் அணி திரண்ட தொழிலாள வர்க்கத்தின் மீதான தாக்குதல்கள் மூலம் ஆழமாக வெளிப்பாடாகி வருகின்றன சம்பள வெட்டு, மூர்க்கமான வேலை அதிகரிப்புக்கள் சாதாரண சம்பவங்களாகி விட்டன. இராட்சத பன்னாட்டு கம்பனிகள் ஒரு நாட்டின் சுரங்கத் தொழிலாளர்களை இன்னொரு நாட்டில் உள்ள அவர்களின் வர்க்க சகோதரர்களுக்கு எதிராக பாவிக்கின்றன.

அமெரிக்க ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியும் திரிபுவாத சோசலிசத் தொழிலாளர் கட்சியும் முதலாளித்துவ ஜனநாயகக் கட்சியின் முண்டு கோல்களாக நின்று கொண்டு உள்ளன. தொழிலாள வர்க்கம் சுயாதீனமாக தனது சொந்த வேட்பாளரை நிறுத்துவதை அவர்கள் மூர்க்கமாக எதிர்க்கிறார்கள்.

'வேர்க்கஸ் லீக்', நியூயோர்க் நியூஜேர்சி, பென்சில்வேனியா, ஒஹியோ, மிச்சிக்கன் இலினோய்ஸ் அத்தோடு தெற்கில் அலாபாமா' விலும் வாக்கெடுப்பில் கலந்து கொள்கின்றது. சிவில் உரிமை போராட்டங்களின் முக்கிய களமாக விளங்கிய அலாபாமா போன்ற மாநிலங்களில் வேர்க்கஸ் லீக்கின் தலையீடு அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக வாக்கு வேட்டையில் இறங்கியுள்ள ஜக்சன் போன்ற முதலாளிகளின் 'இடது' கோலங்களை இலட்சோப லட்சம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு அம்பலப்படுத்துவதில் கைகொடுக்கும்.

வேர்க்கஸ் லீக்கின் உப ஜனாதிபதி வேட்பாளரான பரிபோஸ்டர் மிச்சிக்கன் மாநிலத்தின் வேட்பாளர் அந்தஸ்தை அடைய அவசியமாக்கப்பட்ட 16313 கையொப்பங்களுக்கு பதிலாக 23127 கையொப்பங்களை திரட்டியுள்ளார். கடந்த காலத்தில் அதிகாரிகள் கையொப்பங்களில் ஒழுங்கீனங்கள் எனக் கூறி கட்சி தேர்தல் அந்தஸ்து பெறுவதை தடுக்க முயன்றனர். அந்தக் கெடுபிடிகளை இந்த அதிகரித்த கையெழுத்துக்கள் தோற்கடித்துள்ளன.

மிச்சிக்கன் மாநிலத்தில் தொடர்ந்து 4 ஜனாதிபதி தேர்தல்களில் வேட்பாளர் அந்தஸ்து பெற்ற ஒரே சோசலிஸ்ட் இயக்கம் 'வேர்க்கஸ்

★ 7 ம் பக்கம் பார்க்கவும்

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் :——————————————

முகவரி :——————————————

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல. 90, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் - கீர்த்தி பாலசூரிய நினைவுக் கூட்டம்

# பப்லோவாத எதிர்ப்பு போராட்டம் கீர்த்தியின் அரசியல் பாத்திரத்தின் அடிப்படையாகியது

**— பீட்டர் சுவார்ட்ஸ்**

''தோழர். கீர்த்தி இருநூற்றுண்டின் இரண்டாம் அரைப்பகுதி பாகத்தின் ஒரு மாபெரும் மார்க்சிஸ்ட். தோழர் கீர்த்தி பாலசூரியாவின் முழு வாழ்க்கையும் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதம், நிரந்தரப் புரட்சிக்கான போராட்டத்தின் மூலம் வழி நடாத்தப்பட்டது அபிவிருத்தி செய்யப்பட்டது

லண்டனில் கடந்த பெப்ரவரி 7 ம் திகதி அனைத்துலக குழுவின் பிரித்தானியப் பகுதியான அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சியினால் நடாத்தப்பட்ட கீர்த்தி பாலசூரிய நினைவுக் கூட்டத்தில் பேசிய நா. அ. அ. குழுவின் செயலாளர் தோழர். பீட்டர் சுவார்ஸ் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

''தோழர். கீர்த்தி பாலசூரியாவுக்கு கம்யூனிஸ்ட் அறிக்கை, 'உலக தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்பன ஞாயிற்றுக்கிழமை கூட்டங்களில் உச்சாடனம் செய்யப்படும் வெறும் வசனங்களுக்கு அப்பாற்பட்டவை. அவரைப் பொறுத்த மட்டில் இவை மார்க்ஸ் எங்கேல்ஸ் லெனின் ட்ரொட்ஸ்கிக்குப் போன்று விஞ்ஞான ரீதியில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட முன்நோக்கின் வெளிப்பாடாக விளங்கியது. பாட்டாளி வர்க்கம் ஒரு அனைத்துலக வர்க்கம் என்ற முறையில் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சின் பதாகையின் கீழ் ஐக்கியப்படுத்தப் பட்டுள்ளது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் மட்டுமே முதலாளித்துவ சொத்து உறவுகளை தூக்கி வீசவும், முதலாளித்துவ தேசிய அரசுகளின் தடையை தாண்டவும் தொழிலாள வர்க்கத்துக்கும், முழு மனித இனத்துக்கும் எதிர்காலத்தை வழங்கும் சமுதாயத்தை சிருஷ்டிகவும் முடியும்.

''அந்த அடிப்படையில் முதலாளித்துவ சுரண்டல், ஒடுக்குமுறை, துன்பங்கள் யுத்தங்களுக்கு தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே முடிவு கட்ட முடியும்.

''பப்லோவாத திரிபுவாதம் இம்முன்நோக்கினை கைவிட்டு விட்டு, குட்டி முதலாளித்துவ சக்திகளுக்கு அடிபணிந்து. யாக்கிசத்தை காட்டிக் கொடுத்து தொழிலாள வர்க்கத்தினை இந்த குட்டி முதலாளித்துவச் சக்திகளுக்குக் கீழ்ப்படுத்தியது. இதைச் செய்கையில் அவர்கள் தொழிலாள வர்க்கத்தைச் சிரச்சேதம் செய்தனர். நேரடியாக ஏகாதிபத்திய நலன்களை பிரதிபலித்தனர்.

## சமசமாஜ துரோகம்

''சமசமாஜக் கட்சி தனது அனைத்துலக கொள்கைகளை காட்டிக் கொடுத்தமை பப்லோவாத திரிபுவாதத்தின் உள்ளடக்கத்தை காட்டியது; அது 'சிங்கள இனவாதத்துக்கு' தூபமிடுவதாக மாறியது. தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத கலகங்களுக்கு தூபமிடுவதாக மாறியது ஒரு தேசிய இலட்சம் என்ற வகையில் அதன் உரிமைகளை நசுக்கியது. அந்த விதத்தில் இலங்கை தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தை முழுமனே நாசமாக்கியது.

''அமெரிக்க சோசலிச தொழிலாளர் கட்சி பப்லோவாத முகாமுக்குள் சென்றதன் மூலமே இந்நிலைமை தயார் செய்யப்பட்டது. இதற்கு எதிராகவே புரட்சிக கம்யூனிஸ்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. தோழர். கீர்த்தி பாலசூரிய இளம் பராயத்தில் — 20 வயதில் இதன் பொதுச் செயலாளரானார். அனைத்துலக ரீதியில் இடம் பெற்ற இந்தப் போராட்டமே — பப்லோவாத திரிபுவாதக் காட்டிக் கொடுப்புக்கு எதிரான போராட்டமாகியது, அது அவரை மார்க்சிஸ்ட் ஆக்கியது. அது அவரின் வாழ்நாளில் அவர் ஆற்ற வேண்டிய அரசியல் பாத்திரத்தின் அடிப்படையாகிற்று.

''1971 ல் கீர்த்தி இப்போராட்டத்தில் ஈடுபட்டார். இம்முறை தொழிலாளர் புரட்சிக் கட்சியின் மைக்கேல் பண்டாவுக்கும், பங்களாதேஷ் யுத்தத்தில் இந்திய முதலாளி வர்க்கத்துக்கு ஆதரவளிக்கும் பாதுகாப்பளிக்கும் அவர்களின் நடைமுறைக்கும் எதிராக போராடினர்.

''இன்றைய இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கையின் நிலையை பார்ப்பின் அன்று தோழர். கீர்த்தி தொடுத்த போராட்டம் ஒரு மார்க்சிஸ்ட் என்ற முறையில் அவரின் முதிர்ச்சியையும் அதே வேளையில் அவரின் மேதாவிலாசத்தையும் நிரூபித்தது. அங்கு இந்திய முதலாளி வர்க்கத்தின் முற்றிலும் படுபிற்போக்குப் பாத்திரம் மார்க்சிஸ்டுகளுக்கு மட்டுமன்றி, நாளந்தம் இந்திய இராணுவத்தின் ஒடுக்குமுறைக்கும், காட்டுமிராண்டித் தனத்துக்கும் ஆளாகியுள்ள தமிழ் தொழிலாளர், விவசாயிகளுக்கும் தெளிவாகியுள்ளது.



கீர்த்தி பாலசூரிய

கீர்த்தியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அனைத்துலகக் குழுவின் (யதார்த்தத்தில் தொ. பு. கட்சியின்) போக்கினை இது தொழிலாள வர்க்கத்தினுள் தடுமாற்றத்தை உண்டு பண்ணும் என்ற போதிலும் — போராடினர். ஆனால் அச்சமயத்தில் கீர்த்தி கிளிப் சுலோற்றருக்கு எழுதிய கடிதத்தில் ''இருப்பினும் எல்லாவற்றையும் விட அகிலத்தினுள் தெளிவு மிகவும் முக்கியமானது அனைத்துலகத்தைக் கட்டி எழுப்ப போராடாமல் எம்மால் ஒரு தேசிய பகுதியை கட்டி எழுப்புவது முடியாத காரியம்'' எனக் குறிப்பிட்டார்.

தோழர் சுவார்ஸ் தொடர்ந்து பேசுகையில் ''இன்றுள்ள பிரச்சினை இது தான் சகல திரிபுவாதிகளும், சிறப்பாக 1985 ம் 1986 ம் ஆண்டுகளில் அனைத்துலகக் குழுவில் இருந்து பிரிந்த தொ. பு. கட்சியின் ஓடுகாலிகள் இதனை அடியோடு நிராகரிக்கின்றனர். அவர்கள் உண்மையில் இதைப் புரிந்து கொள்வதாயும் இல்லை.''

இப்போராட்டமும், இதை தொடர்ந்து தொ. பு. க. நிலைமை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிராக நடாத்திய தாக்குதல்கள் கீர்த்தியின் உடல் நலத்தை பெரிதும் பாதித்தன. ஆனால் 1986 ல் இருந்து தோழர். கீர்த்தி ஓடுகாலிகளுக்கு எதிரான போராட்டத்தில் தீர்க்கமான பங்கினை வகித்தார் அவரின் பத்திரங்கள் மார்க்சிசப் புகழ் வாய்ந்தவை. அவை உலகம் பூராவுமுள்ள தொழிலாள வர்க்க காரியாளர்களுக்கு கல்வியூட்டும்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளர் விஜே டயஸ் பேசுகையில் கீர்த்தியை இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் இலங்கையில் தோன்றிய மிக முக்கியமான அனைத்துலகவாதி எனக் குறிப்பிட்டார். இரண்டாம் உலக மகாயுத்தத்தை தொடர்ந்து இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியும், சமசமாஜக் கட்சியும் தேசியவாதத்துக்கு அடிபணிந்து போனதையும், நானாவிதமான குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் தொழிலாள வர்க்க இயக்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தை கீழ்ப்படுத்தும் விதத்தில் தலை தூக்கியதை சுட்டிக் காட்டினார்.

## போலி ஜனநாயகக் கட்சிகள்

1960 பதாம் ஆண்டுகளில் இவற்றின் வெடிப்பினை விளக்குகையில் விஜே டயஸ் பின்வருமாறு குறிப்பிட்டார் ''இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் நிறுவப்பட்ட இந்தப் போலி ஜனநாயக ஆட்சிகள் இந்திய உபகண்டப் பிராந்தியத்தில் மட்டுமன்றி உலகம் பூராவும் உடைந்து போனதை நாம் கண்டோம்.

''பண்டாரநாயக்கா ஒன்றில் சமசமாஜக் கட்சி துரோகிகளுடன் சேர்ந்து ஒரு கூட்டரசாங்கத்தை அமைக்க வேண்டும் அல்லது இராணுவ சர்வாதிகாரத்தில் ஈடுபட வேண்டி இருந்தது. சமசமாஜ — கம்யூனிச கட்சிகளே பண்டாரநாயக்காவை ஆபத்திலிருந்து காத்தனர்.

தோழர் ஸ்பைக் பெரேராவுடன் இணைந்து தோழர். கீர்த்தியும் ஏனைய இளம் தோழர்களும் பப்லோவாதத்துக்கு எதிராக தொடுத்த போராட்டம் பற்றிக் குறிப்பிட்ட விஜே டயஸ் குட்டி முதலாளித்துவ மக்கள் விடுதலை முன்னணி தலைவர்களை தடம் புரளச் செய்ய எடுத்த நடவடிக்கைகளை எதிர்த்து 1970 ல் அவரின் மார்க்சிச ஆய்வுகளை விளக்கினர். அத்தோடு ம. வி. மு. உடனான அரசியல் வேறுபாடுகளையும் ம. வி. மு. அரசியல் கைதிகளை விடுதலை

★ 5 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு போராட்டம் யூ. என் பியை வெளியேற்றும் போராட்டமாக வேண்டும்

சம்பள உயர்வு கோரி தோட்டத்துறை தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி நடாத்திய அடையாள வேலை நிறுத்தத்தில் சுமார் 2 இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

பெப்ரவரி 1 ம் திகதி 12 தொழிற்சங்கங்கள் ஏற்பாடு செய்த இந்த வேலை நிறுத்தத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தொண்டமான் — செல்லச்சாமி தலைமையின் கருங்காலிப் பாத்திரத்துக்கு மத்தியிலும் அச்சங்கத்தின் அங்கத்தினர்களும் பங்கு கொண்டனர்.

இந்த வேலை நிறுத்தம் 1984 ம் ஆண்டின் பின்னர் சம்பள உயர்வு கிடைக்காதது சம்பந்தமாக மட்டும் அன்றி, 1987 ஜுலையில் கைச்சாத்தான தொழிலாளர் விரோதி காந்தி — ஜயவர்தன ஒப்பந்தத்தின் பின்னர் இந்நாட்டில் தொழிலாள வர்க்கத்தின் மிக முக்கிய பகுதியினர் நடாத்திய வேலை நிறுத்தம் ஆகும்.

1987 அக்டோபரில் இடம்பெற்ற உலகப் பங்குமுதல் சந்தையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து வந்த யூ. என். பி. அரசாங்கத்தின் 10 வது வரவு செலவுத்திட்டம் அரசாங்கதுறை ஊழியர்களுக்கு வழங்கிய அற்ப சொற்ப சம்பள அதிகரிப்பைத்தன்னும் வழக்கம் போல் இம்முறையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கத் தவறிவிட்டது. இதைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளது என்பதை அரசாங்கமே ஒப்புக் கொண்டது.

கொழும்பு சந்தையில் பெரும் விலை உயர்வுக்கு உள்ளான அரிசி, சீனி, மாவு, பால் மா போன்ற அத்தியாவசிய பண்டங்கள் தோட்டத்துறையில் எத்தகைய தாக்கத்தை உண்டாக்கும்? இது 'போஷாக்கின்மை' அல்லது வாழ்க்கைத்தரம் வீழ்ச்சி பற்றிய பிரச்சினையன்றி பட்டினி பஞ்சம் பற்றிய பிரச்சினையை தோற்றுவித்துள்ளது.

தொண்டமான் — செல்லச்சாமி தலைமையின் பேச்சுவார்த்தைகள் பற்றிய நப்பாசைகளுக்கு அடிபணியாமலும் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் வங்குரோத்து சீர்திருத்த வேலைத்திட்டத்திற்கு மத்தியிலும் தொழிலாளர்கள் இலட்சக் கணக்கில் வேலை நிறுத்தத்தில் குதித்தமை யூ. என். பி. அரசாங்கத்துக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் வளர்ச்சி காணும் குரோதத்தினைச் சுட்டிக் காட்டுகின்றது.

1949 ம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்த பிற்போக்கு பிரஜாவுரிமைச் சட்டங்களும் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தங்களும், தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இரத்தம் தோய்ந்த காந்தி — ஜயவர்தன ஒப்பந்தமும் இந்திய ஆக்கிரமிப்பும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இலங்கை — இந்திய ஆட்சியாளர்களின் கூட்டுச் சதியாகும் வட — கிழ் மாகாண அகதிகளை இந்தியா திருப்பி அனுப்பும் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களை பலவந்தமாக இங்கிருந்து வெளியேற்றும் திட்டமும் அடங்கியுள்ளது.

எனவே தான் இந்தப் பிற்போக்கு, காந்தி — ஜயவர்தன ஒப்பந்தத்துக்கு முழு அளவிலான ஆதரவினை வழங்கும் ஸ்டாலினிச இராமையா — நடேசன் தலைமையின் இலக்கு தோட்டங்களை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்குவதோ, அதற்கான சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடுவதோ அல்ல. மாறாக அவர்கள் இந்தப் பிற்போக்கு ஒப்பந்தங்கள் அனைத்தையும் பேணுகின்றனர்.



தொண்டமான் — ஜே, ஆர். ஜயவர்தன

யூ என். பி. கருங்காலி தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து வேலை நிறுத்தத்தினை பகிஷ்கரிக்க கோரிய தொண்டமான் — செல்லச்சாமி தலைமையுடனான தமது வெறுப்பினை வெளிப்படுத்தும் விதத்தில் கொட்டகலை ட்ரெய்டன் தோட்டத்தில் மட்டும் 200 க்கும் அதிகமான தொழிலாளர்கள் இ. தொ. கா சந்தா பணத்தை தமது சம்பளத்தில் இருந்து பிடித்துக் கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

யூ. என். பி. அரசாங்கத்திற்கும் பெப்ரவரி 1 ம் திகதி வேலை நிறுத்தத்துக்கு தலைமை தாங்கிய கூட்டுக் கமிட்டிக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகளுக்கு காரணம் இ. தொ. கா., யூ. என். பி. அரசாங்கத்துடன் தம்மையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே.

தோட்டங்களில் இரத்தக் களரியை ஏற்படுத்தும் வகையில் தோட்டங்களை துண்டாடவும், கிராமவாசிகளுக்கு வழங்கவும் யூ. என். பி. அரசாங்கமும் மற்றும் இனவாத முதலாளித்துவக் கட்சிகளும் முயன்று வருகின்றன. இதன் மூலம் நிலமற்ற கிராமவாசிகளையும் தொழிலாளர்களையும் திட்டமிட்டு மோத வைக்க அரசாங்கமும் முயல்கின்றன.

இந்நிலையில் தோட்டங்களில் போராட்டக் குழுக்களை அமைக்கவும் பொது வேலை நிறுத்தத்துக்கான தயாரிப்புக்களிலும் தொழிற்சங்கத் தலைமைகளை ஈடுபடுத்த தொழிலாளர் நெருக்க வேண்டும்.

தோட்டங்களை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்குவது உள்ளடங்கலான சோசலிச வேலைத்திட்டத்தினை கலந்துரையாடவும், அமுல் செய்யவும் தொழிலாளர் பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாட்டினைக் கூட்ட 21 தொழிற்சங்கங்களின் தலைமையை (சமசமாஜ — கம்யூனிச) கோரும் படி தோட்டத்துறை தொழிற்சங்கத் தலைமைகளை தொழிலாளர் நெருக்க வேண்டும்.

அம்மகாநாட்டில் இந்திய — இலங்கைப் படைகளை வடக்கு — கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேற்றவும், காந்தி — ஜயவர்தன உடன்படிக்கையை இரத்துச் செய்யும் படியும் தொழிலாளர்கள் கோர வேண்டும்.

இந்த புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்துக்காகப் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து புதிய தலைமையைக் கட்டி எழுப்ப முன் வருமாறு 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது.

## லண்டன் — கீர்த்தி பாலசூரிய. . .

★ 4 ம் பக்கத் தொடர்ச்சி

செய்யவும், அதனை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதற்கு எதிராகவும் கீர்த்தியின் தலைமையில் பு. க. க போராடியதாக குறிப்பிட்டார். இவை ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களை படுகொலை செய்த ஈராக ஆட்சியாளர்களுக்கு ஆதரளித்த தொ. பு. க ஹீலி தலைமையின் அரசியல் போக்குக்கு நேர் எதிரானது என்றார்.

பிரித்தானிய அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் தோழர் டேவ் ஹைலண்ட் பேசுகையில் இன்றிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தொ. பு. கட்சியின் சிறுபான்மையினர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஆதரவுடன் தொ. பு க. 8 வது காங்கிரசுக்கு தயாராகி வந்தனர். அச்சமயத்தில் சிறுபான்மையினர் அனைத்துலகக் குழுவின் வரலாற்று பாரம்பரியங்களை பேணினர் 8 வது காங்கிரசினுள் நுழைய தயாராகி வந்தனர். அந்த போராட்டத்தை தொடரவும் தொ. பு. க. பெரும்பான்மையினர் ஆகவும் போராட இருந்தனர் அன்று ஒரு போலி "வேர்க்கஸ் பிரஸ்" வெளியிடப்பட்டது. அது தோழர் நோர்த்துக்கும் அனைத்துலகக் குழுவுக்கும் எதிரான சேறடிப்புக்களை மேற் கொண்டது இப்பத்திரிகை நான்காம் அகிலத்தின் முழு வரலாற்றையும் மரபுரிமைகளையும் தாக்கும் மைக் கல்ண்டாவின் ஒரு பத்திரத்தை கொண்டிருந்தது

"கிளிப் சுலோற்றர், ஹன்டர், பிரானி, சிமித் பில்லிங்கின் தலைமையிலான இதந்த 'பெரும்பான்மை' சிறுபான்மையினருக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி, அவர்களை மகாநாட்டில் இருந்து தள்ளி வைக்க முயன்றது. எம்மை வெளியேற்ற அவர்கள் பொலிசாரையும் அழைத்தனர். ......

இந்நடவடிக்கை புரட்சிகர இயக்கத்துக்கும் அனைத்துலக தொழிலாள வர்க்க இயக்கத்துக்கும் எதிரான வர்க்க சக்திகளின் பிரதிநிதித்துவம் செய்தன.

### உள்ளீர்ப்பு

"இந்தச் சக்திகளுக்கு முர

★ 7 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முன்னணியை நிராகரி!

[2 ம் பக்கத் தொடர்ச்சி]

டும் ஏற்றுமதி செய்த பண்டங்களுக்கு கிடைத்த வருமானத்தில் வட்டியாகவும் கடன் மீளளிப்பாகவும் நூற்றுக்கு 262% செலுத்தப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில் இடம் பெற்ற யுத்தத்தினல் பொருளாதாரத்துக்கு நேரிட்ட இழப்பு 550 கோடியாகும். பொதுப் பணிகளுக்கு ஏற்பட்ட சேதம் 2000 கோடி. 1982 ல் 6.2 ஆக அதிகரித்ததாக கூறப்பட்ட தேசிய வருமானம் 1987 ல் 3 வீதமாக வீழ்ச்சி கண்டது அரசாங்கத்தின் முழு வரவு செலவுத்திட்ட பற்றுக்குறை 2.913 கோடியை தாண்டியுள்ளது. நாட்டில் வறுமை மட்டம் வளர்ச்சி கண்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களின் எண்ணிக்கை மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 60%. எழுத்தறிவற்றோர் எண்ணிக்கை நூற்றுக்கு 13 வீதமாக உயர்ந்துள்ளது. இளைஞரின் வேலையின்மை மாகாணத்துக்கு மாகாணம் 18 — 24 வீதம் பரந்த அளவில் அதிகரித்துள்ளது. பாடசாலை செல்லும் மாணவர்களில் நூற்றுக்கு 60% போஷாக்கின்மையால் வாடுகின்றனர். பணவீக்கம் அரசின் அளவுகோலின் படி நூற்றுக்கு 13.2 வீதமாக உள்ளது.

சுதந்திரம் வழங்கப்பட்டதற்கு பின்னர் இலங்கை பொருளாதார, அரசியல் நெருக்கடி நாற்றமெடுப்பில் புதைந்து போன பலவீனங்களின் நிலையில் உள்ளது. இந்த ஆளும் வர்க்கம் தாம் தனித்து ஆட்சி நடத்த முடியாது என்பதைப் புரிந்து கொண்டு வெளிநாட்டு பிற்போக்கு இராணுவத்தின் உதவியோடு தம்மைப் பாதுகாக்க வேண்டும் என முடிவு செய்துள்ளது.

இந்த முதலாளி வர்க்கத்தின் பின்னல் வயிறு வளர்க்கும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்கள், முதலாளி வர்க்கத்துக்கு பிராண வாய்வு பாய்ச்சும் சந்தர்ப்பம் கிடைத்த மகிழ்ச்சியில் 1987 ஜூலை 29 ல் இந்திய — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பொழுது யூ. என். பி அரசாங்கத்தின் கீழ் ஜனநாயகம்' விஸ்தரிக்கப்படுவதாக பரப்பிய மாயை சிதறடிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக தொழிலாள வர்க்கம் நேர் எதிரான நிலையை காண்கின்றது. சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மற்றுமோர் மக்கள் முன்னணி வலையை இந்நிலைமையிலேயே விரித்துள்ளனர் இத்தொழிலாள வர்க்கத் தலைமையின் மாயை விலங்குகளுடன் மோதுவதன் மூலம் யூ. என். பி. அரசாங்கத்திற்கும், முதலாளி வர்க்கத்துக்கும் எதிரான போராட்டத்தில் குதிக்கும் நிலைமை உருவாகி உள்ளது.

இப்பிராந்தியத்தினுள் ஏகாதிபத்தியத்தினதும் தேசிய முதலாளி வர்க்கத்தினதும் புகழ் பெற்ற எதிர்ப்புரட்சி ஏஜன்டாக விளங்கும் கொல்வின் ஆர். டி. சில்லா உருவாக்கி உள்ள நிலைமையைப் பற்றிய தமது மதிப்பீட்டினை 1988 பெப்ரவரி 2 ம் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு பின்வரும் விதத்தில் வழங்கினர்.

''புரட்சிகர தொழிற்பாடு நன்கு இயங்குவதற்கு முதற் தடையாக தொழிலாள வர்க்கத்தின் செயலற்ற தன்மையும் பலவீனமான அரசியல் அமைப்பு நிலைமையும் விளங்குகின்றது.

''பொருளாதாரத்தில் முக்கிய இடத்தினை வகித்த போதிலும் வர்க்க சக்தியின் ஒரு பாகமான தோட்டத் தொழிலாளர்கள் சிறப்பாக இனப்பிரச்சினையின் செயலிழக்கச் செய்யும் செல்வாக்குகளினுல் பொது நிலைமையில் ஆகக் கூடியது குறைந்த அளவிலான அரசியல் தாக்கத்தினையே ஏற்படுத்த முடியும்.

''ஜாதிக சேவக சங்கம் போன்ற தொழிற் சங்கங்களின் கூட்டில் யூ. என் பி. யின் பரந்த அளவிலான ஊடுருவல்களினுல் தொழிலாள வர்க்கத்தின் ஏற்பட்டுள்ள பலவீனத்தையும் தொழிலாள வர்க்கத்தின் இன்றைய அரசியல் செயலிழப்பினையும் சிருஷ்டிப்பதில் பெரும் பங்கு கொண்டுள்ளது. அவ்வாறே யூ. என்; பி. அரசாங்கம் அதனை [தொழிலாள வர்க்கத்தை] நசுக்கிக் கொண்டுள்ள மோசமான ஒடுக்கு முறையும் அதற்குக் காரணம் ஆகும்.

''இந்தச் செயலிழப்பினை உடைத்து எறிந்ததும் தொழிலாள வர்க்கம் பொது நெருக்கடி சிருஷ்டித்துள்ள நிலைமையினுள் அரச அதிகாரத்தினைக் கைப்பற்றும் அரசியல் பாதை நெடுகிலும் வேகமாகப் பயணம் செய்யும். அவர்கள் அங்ஙனம் பயணம் செய்கையில் தம்முடன் சுரண்டலுக்கு உள்ளான ஏனைய பிரிவினரையும் பரந்த மக்கள் இயக்கமாக முன்கொண்டு செய்யும். அந்த இயக்கம் சுதந்திர இலங்கை இது காறும் கண்டுள்ள எந்தவொரு இயக்கத்தைக் காட்டிலும் போர்க்குணம் மிக்கதாக விளங்கும்.

''வர்க்கப் போராட்டத்தின் புனர் ஜீவனத்தினை உண்மையில் எம்மால் கண்டு கொள்ள முடியும். சிறப்பாக, வளர்ச்சி காணும் போது நெருக்கடியை வெற்றி கொள்ள அல்லது குறைந்த பட்சம் தடுத்து நிறுத்த என்ன செய்வது என்பது பற்றி முதலாளி வர்க்கம் மேலும் மேலும் பிளவுபட்டுகிடப்பதே இதற்குக் காரணம்''

[''டெயிலி நியூஸ்'' — 1982 பெப்ரவரி 2]

இந்த எதிர்ப்புரட்சி சமசமாஜ தலைவர் கடந்த 2½ தசாப்தங்ளாக எதிர்ப்புரட்சி ஸ்டாலினிச தலைவருடன் இணைந்து, சிறீலங்கா — யூ. என். பி. அரசாங்கங்களுக்கு முண்டு கொடுத்தும், தொழிலாள வர்க்கத்தினை முதலாளி வர்க்கத்துக்கு அடிமைப்படுத்தும் தாக்குதல் தொத்தும், பலவீனமாக்கவும் செற்பட்டனர். அதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன இயக்க சக்தியை சிதறடித்து 'ஸ்தம்பிக்கச்' செய்ய கைகொடுத்து முதல் இடம் கொடுத்தனர்: இன்று தொழிலாள வர்க்க போராட்டத்துக்கு 'புனர்வாழ்வு' அளித்தல் 'புரட்சிக் கிளர்ச்சி' அறிகுறிகள் பற்றி முதலாளித்துவ எஜமான்களுக்கு கூறி வருகின்றனர். தொழிலாள வர்க்கத்துக்கு நாம் விடுக்கும் எச்சரிக்கை இது தான்: சமசமாஜ — ஸ்டாலினிச துரோகத் தலைவர்கள் இத்தகைய கணக்கெடுப்புக்களில் ஈடுபடக் காரணம் கிளர்ந்து வரும் தொழிலாள வர்க்கத்தை புதிய மக்கள் முன்னணி பொறியில் அகப்படச் செய்வதும், அதன் மூலம் அதனை அரசியல் ரீதியில் 'செயலிழக்கச்'' செய்து காட்டிக் கொடுப்பதே.

கடந்த ஜனவரி 31 ம் திகதி சம்பளக் கோரிக்கையின் பேரில் அடையாள வேலைநிறுத்தத்தில் குதித்த பேரளவிலான தோட்டத் தொழிலாளர்கள், முதலாளித்துவ அரசின் தாக்குதலை இனியும் சகிக்க முடியாது என்பதை சுட்டிக் காட்டினர். கடந்த பல வருடங்களாக இ. தொ. கா. தலைவர்களுடன் சேர்ந்து தொழிலாளர்களின் போராட்டங்களை நிறுத்தி வைக்க தொழிற்பட்ட சமசமாஜ — கம்யூனிஸ்ட கட்சிகளின் தலைவர்கள் இத்தடவை வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தற்கு காரணம் அவர்கள் 'இடது' பக்கம் சென்றது அல்ல.

யூ. என். பி. அரசாங்கத்தினுள் புகுந்து கொண்டுள்ள இ. தொ. கா துரோகிகளால் நிறுத்தி விட முடியாத அளவுக்கு தோட்டத் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். இதனல் 'போராட்ட' முகமூடி அணிந்து தொழிலாள வர்க்கத்தின் கிளர்ச்சியை தமது பிடிக்குள் கொணர்ந்து, கரைத்து விட தொழிற்பட்டனர்.

தனியார் மயமாக்கத்திற்கும் வாழ்க்கைத்தர வீழ்ச்சிக்கும் எதிராக போராடும் அவசியம் தொலைத் தொடர்பு, சௌக்கிய சேவை, ரொபாக்கோ, ஹேகாப், மக்சிம் முதலான தனியார் கம்பனி தொழிலாளர்களின் பிரச்சாரம் மூலம் அம்பலமாகிறது.

இத்தொழிலாள வர்க்கம், ஏகாதிபத்தியத்தினதும், தேசிய முதலாளி வர்க்கத்தினதும் நலன்களை காக்க இந்திய — இலங்கை உடன்படிக்கை மூலமும் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் இருப்பின் மூலமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஜயவர்தன அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டத்திற்கு தாம் முகம் கொடுத்துள்ளதை கண்டு கொள்ளும்.

தேசிய இளைஞர் சேவை மன்ற கூட்டமொன்றில் பெப்ரவரி 2 ம் திகதி பேசிய ஜனதிபதி ஜயவர்தன இந்தியப் படைகளை வடக்கு — மாகாணங்களுக்கு கொணர்வதன் மூலம் 2.3000 இராணுவத்தினரை ஏனைய மாகாணங்களில் ஈடுபடுத்த விலக்கிக் கொள்ள முடிந்தது என்றார்.

அடிப்படை உரிமைகளை காக்கும் பொருட்டு போராட்டத்திகு ஈர்க்கப்படும் தொழிலாள வர்க்கம், இந்திய — இலங்கை ஒப்பந்தத்தினையும் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பினையும் எதிர்த்து தமிழ் ஈழத்திலும் இந்திய துணைக் கண்டத்திலும் உள்ள தமது சகோதர தொழலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தினைக் கட்டி எழுப்ப வேண்டும்! அதன் மூலம் யூ. என் பி. அரசாங்கத்தினையும் முதலாளித்துவ அமைப்பினையும் தூக்கி வீசி, தமது கைக்குள் ஆட்சியை கைப்பற்ற முன் செல்ல வேண்டும்.

இந்திய — இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் சமசமாஜ கட்சி தலைவர்களும் அவர்களின் மத்தியவாத சகாக்களும் காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களுக்கு வழங்கும் எதிர்ப்புரட்சி ஆதரவின் மூலம் இலங்கை, தமிழீழம், இந்திய தொழிலாள வர்க்கத்தினை பிளவு படுத்தவும் நடாத்தும் நடவடிக்கைகளை மனதில் கொண்டு இந்த தொழிலாள வர்க்கத்தினை நனவு ரீதியாக ஐக்கியப்படுத்தும் அவசியம் புறநிலை ரீதியாக உருவாகி உள்ளது. அ. வி. சே. சங்க மத்தியவாத தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்கு எதிராக 1988 ஜனவரி 29 ம் திகதி அ. வி சே. சங்க மகாநாட்டில் பேசிய யாழ்ப்பாண பேராளர் இந்திய இராணுவத்தை விரட்டி அடிக்க வடக்கு — கிழக்கு தொழிலாளர்களதும் தென்பாக தொழிலாளர்களதும் ஐக்கியத்தினை வேண்டினர். இது முதலாளித்துவத்துக்கு எதிராக அந்த ஐக்கியத்தினை ஏற்படுத்த செய்யும் முயற்சியை சுட்டிக் காட்டியது.

சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்கள் முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சி தலைமையுடனும், தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் மத்தியவாதிகளதும் ஆதரடன் 'ஐக்கிய சோசலிச முன்ளணியை அமைத்தனர். இதன் முக்கிய பணி இந்திய — இலங்கை முதலாளிகளின் நலன்களின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை பிளவு படுத்தி செல்ல திணிக்கப்பட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கும் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் இந்திய இராணுவம் நடாத்தி வரும் ஆக்கிரமிப்புக்கும் ஆதரவாக செயற்படுவதே. அதன் படி தோழமை கரம் நீட்டும் தமிழ் தொழிலாள வர்க்கத்தினை இரத்தத்தில் மூழ்கடிக்க வேண்டும் எனக் கூறும் படி சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இலங்கைத் தொழிலாள வர்க்கத்திற்குக் கூறுகின்றார்கள். அதே சமயம் அவர்கள் இந்திய முதலாளித்துவத்தின் முற்போக்குத் தன்மையை தமிழ் தேசிய இனத்தின் சவக் குவியலின் மீதாக உறுதி செய்து, இந்திய தொழிலாள வர்க்கத்தை காந்தி அரசாங்கத்தின் பின்னல் தள்ளி விட தொழிற்படுகின்றனர்.

இந்திய ஸ்டாலினிஸ்டுகள் இதற்கு அனுசரணையான செயற்திட்டத்தை நிறைவேற்று

★ 7 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முன்னையை நிராகரி!

[6 ம் பக்கத் தொடர்ச்சி]

இன்றனர். இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஈ. எம் எஸ் நம்பூதிரிபாத் இங்ஙனம் கூறியுள்ளார்.

“இந்திய — இலங்கை ஒப்பந்தம் செயற்படும் வரையும் இனப்பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு இட்டும் வரை இந்திய சமாதானபடை சிறீலங்காவினுள் நிலை கொண்டிருக்க வேண்டும் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவினத்தை பொருட்படுத்தாது தங்கியிருக்க வேண்டும். அங்ஙனம் செய்யாவிடின், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் செய்யும் ஏகாதிபத்திய முகாம் ஒன்றாக அந்நாடு மாற்றப்படும்.”

[“இந்து”, 1988 ஜனவரி 27]

யூ. என். பி. அரசாங்கத்திற்கு எதிராக போராடுகின்ற சாட்டில் ல. ச. ச. கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி தலைமைகள் ஏற்படுத்தியுள்ள முன்னணியின் கைங்காரியம் யாதெனில், உண்மையில் “சுதந்திர சிறீலங்காவில்” காணமுடியாத மட்டத்தில் பாரிய போராட்டங்களுக்கு தொழிலாள வர்க்கம் எழுச்சியுறுகையில் அச்சக்தி தமது வெற்றிக்காக ஏற்படுத்த வேண்டிய அனைத்துலக ஐக்கியத்தை தகர்த்து முதலாளித்துவ வர்க்க ஆட்சியை பாதுகாத்து கொடுத்து விட முதலாளித்துவ வர்க்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட இராணுவ இரும்பூண் ஆட்சிக்கு கீழ்ப்படுத்தவல்ல நிலைமைகளை தயாரித்து கொடுத்து விடுவதேயாம். வடக்கு கிழக்கில் இத்தலைமைகளது உதவியுடன் இராணுவ ஆட்சியை நிறுவியுள்ளது. அது தெற்கிலும் பரந்துபட்டதாக செய்து விட தொழிலாள வர்க்கத்தை தோற்கடித்து விடுவதற்காக முதலாளித்துவத்திற்கு ல. ச. ச. கட்சி, கம்யூனிச தலைமைகளது எதிர்ப்புரட்சிகர சேவை மிக அவசியமாகும்.

இவ்விடத்தில் மிகவும் அவசியமான கேடுகெட்ட அளவிலான காட்டிக் கொடுப்பினூடாக ல. ச. ச. கட்சி — கம்யூனிச — இ. தொ. கா தலைமைகளது காட்டிக் கொடுப்புக்கு நவசமசமாஜ — அ. வி. சே. சங்க மத்தியவாத தலைமைகளிடமிருந்து பக்கபலம் கிடைக்கின்றது.

மாகாண சபை தீர்மானத்தை முன் கொண்டு வரவும் அதனை தமிழ் மக்களிடம் திணித்து விடவும் கொடூர முறையில் முயற்சித்த ந. ச. ச. கட்சி தலைமைகள் இன்று இந்த எதிர்ப்புரட்சிகர முன்னணியை சிறந்த இடதுசாரி ஒன்றாக பூச்சுப் பூசிக் காட்டி அதனை தொழிலாளரிடம் திணிக்க செயற்படுகின்றது. அ. வி. சே. சங்க, இ. ஆ. சங்க மத்தியவாதிகள் வடக்கு — கிழக்கு ஒடுக்கப்பட்ட தமிழ் இனம் இந்தியப்படை தாக்குதலால் ஒடுக்கப்பட வேண்டுமென பகிரங்கமாக கூறுகின்றன. ஜனவரி 29 ம் திகதிய அ. வி. சே. சங்க சம்மேளனத்தில் தமிழ் பேராளர் ஒருவ இந்திய படை வாபஸ் பெறப்படும் என்ற ஒருங்கிணைந்த பிரசாரத்தை சோசிநிற்கையில் மத்தியவாத குண சேன மகாநாம “இந்தியப் படை வாபஸ் பெறப்பட்டபின் அங்கு எந்தப் படையை அனுப்புவதாம்? என வினவியுள்ளார்.

இந்திய — இலங்கை ஆட்சியாளருக்கு ஆதரவு வழங்கியப் படி ல. ச. ச. கட்சி — கம்யூனிச — இ. தொ. கா தலைமைகள் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக ஒரு புறத்தில் யூ. என். பி ன் எதிர்ப்புரட்சிகர ராவலைத்திட்டத்தை நடத்தியும் மறுபுறத்தில் சி. ல. சு. கட்சி — ம. வி. முன்னணி முதலாக கொண்ட பிற்போக்கு சக்திகளை பலப்படுத்தியும் வருகின்றன.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவானது இந்திய — இலங்கை ஒப்பந்தமும் பு. க. க. வின் பணிகள் பற்றி வெளியிட்ட அறிக்கை இந்த எதிர்ப்புரட்சிகர செயற் திட்டத்தின் கருத்தினை பின்வருமாறு எடுத்து காட்டியுள்ளது

“மேலும் வடக்கு — கிழக்கில் இந்தியர்களின் பிரசன்னத்தை அங்கீகரிப்பதன் மூலம் இது ஒடுக்கப்படும் சிங்கள விவசாயிகளின் நியாயமான தேசிய உணர்வுகளை இரக்கமற்ற முறையில் புறக்கணிப்பதோடு, படுபிற்போக்கு மக்கள் விடுதலை முன்னணியினதும் அதன் நம்பிக்கை மிக்க சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆலோசகர்களதும் கரங்களை பலப்படுத்துகின்றது. இக்கொள்கை குட்டி முதலாளித்துவ பலகு ஜனங்களின் கண்களில் தொழிலாள இயக்கத்தை செல்வாக்கு இழக்கச் செய்யவும் சிங்கள இனவெறியின் அடிப்படையிலான பாசிச இயக்கத்தின் பெருக்கத்துக்கும் உதவுகின்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினை இலங்கை முதலாளி வர்க்கத்திற்கு எதிரான வர்க்கப் போராட்டத்தினை சிங்கள, தமிழ் வெகுஜனங்களை ஜனநாயக ரீதியாக ஐக்கியத்துடன் இணைப்பதற்கு பதிலாக சமசமாஜக் கட்சி ஒடுக்கப்படும் ஜனத்தொகையின் சகல பிரிவினரையும் அன்னியமாக்க சாத்தியமான அனைத்தையும் செய்து வருகின்றது. இது இந்திய ஆக்கிரமிப்பினை பெருமை பாராட்டுகின்றது. தமிழர்களை ஒழித்துக் கட்டுவதை ஆதரிக்கின்றது. தெற்கில் ஜயவர்தனவின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை அங்கீகரிக்கின்றது. சமசமாஜக் கட்சியின் கொள்கைகளின் அச்சாணி ஒரு சோசலிச, ஜனநாயக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமாக அணிதிரட்டுவதை நிராகரிப்பதே.”

எதிர்வரும் ஆண்டில் யூ. என். பி. அரசாங்கம் தேர்தலை நடத்தா விட்டால் அரசாங்கத்தை விரட்டி விட்டு தாம் “தேர்தலை நடத்துவதாக” சி. ல. சு. கட்சி தலைவி சிறிமா பண்டாரநாயகா 1988 பெப்ரவரி 10 ம் திகதி நுகேகொட கூட்டத்தில் அறிவித்தார் இவ்வறிக்கை ம. வி முன்னணி உட்பட்ட குட்டி முதலாளித்துவத்தை கொலைக் குண்டராக தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக அணி திரட்டி விட செய்யும் முயற்சியை கட்டிக் காட்டுகின்றது. முதலாளித்துவ வர்க்கத்தின் முழு நெருக்கடியின் மத்தியில் தமது கையில் ஆட்சியை பெற நேர்ந்தால் உடனடியாக தொழிலாள வர்க்கத்தை நசுக்கி விடுதலும், அதன் அமைப்புகளை தகர்த்து விடுதலும் ஆகிய செயற் திட்டத்தை கொண்டு தாம் முன் செல்ல வேண்டுமென சிறிமா பண்டாரநாயகா தீர்மானித்து விட்டதில் ஐயமில்லை. இந்திய — இலங்கை ஒப்பந்தமும் இந்திய படை ஆக்கிரமிப்பிற்கு எதிரான அவரது எதிர்ப்பு கபடமானது ஆகும். அவர் அக்கபடத்தை தொடுத்துள்ளது குட்டி முதலாளித்துவ பிரிவுகளுக்கு இனவாத நஞ்சினை ஊட்டி வெறியேற்றி தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக அணி திரட்டும் கொடிய பிற்போக்கு தேவைக்கேயாம்.

எதிர்ப்புரட்சியை பலப்படுத்தும் யூ. என். பி அரசாங்கத்திற்கும் சி. ல. சு கட்சிக்கும் சி. ல. சு. கட்சி பின்னால் பிற்போக்கு இயக்கமாக செயற்படும் ம. வி. முன்னணிக்கும் எதிராக முதலாளித்துவத்திடம் இருந்தும் சுயாதீனமாக அணி திரளுமாறு தமது அடிப்படை உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபடும் தொழிலாள வர்க்கத்திற்கு நாம் கூறுகிறோம்.

காங்கிரஸ் — யூ. என். பி. அரசாங்கங்களுக்கு வழங்கும்

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

## லண்டன் — கீர்த்தி பாலசூரிய. . .

★ 5 ம் பக்கத் தொடர்ச்சி

ஞான வகையில் மார்க்சிசத்தையும், ட்ரொட்ஸ்கிசத்துக்காக போராட்டத்தையும் உள்ளீர்த்த வண்ணம் அடிப்படைக் கொள்கைகளுக்காக தோழர் கீர்த்தி பாலசூரியவுக்கு மேலாகப் போராடிய எவரும் இருப்பர் என நான் நினைக்கவில்லை”

இந்த ஓடுகாலிகளுக்கு எதிரான போராட்டத்தில், இவற்றின் படிப்பினைகளை தொழிலாள வர்க்கத்தினுள் எடுத்துச் செல்லவும் அனைத்துலக தொழிலாள வர்க்கத்தின் போராட்ட வேலைத்திட்டத்தினைப் பரவலாக்கவும் தோழர் கீர்த்தி போராடியதாக தோழர் ஹயிலன்ட் குறிப்பிட்டார். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சிறுபான்மை குழுவின் தோழர்களிடையே கீர்த்தி ட்ரொட்ஸ்கிச கொள்கைகளை விளக்கியதன் மூலம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ‘வேர்க்கஸ் லீக்கின்’ செயலாளர் தோழர் டேவிட் நோர்த் பேசுகையில் “தோழர் கீர்த்தியின் முழு வாழ்க்கையும் ட்ரொட்ஸ்கியின் பணியுடன் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தது அதாவது தொழிலாள வர்க்கத்தின புரட்சித் தலைமை நெருக்கடியை தீர்த்து வைப்பதில் ஈடுபட்டது. அவர் இப்போராட்டத்தினை மிகவும் இக்கட்டான நிலைமைகளில் நடாத்தினார். இப்போராட்டத்தின் சாராம்சம், பழம் மார்க்சிசத்தினை மறுமலர்ச்சியடைய செய்வதாகும்.

“மத்தியதர வர்க்கத்தில் இருந்து வந்த போக்குகள் எமக்கும், தொழிலாள வர்க்கத்துக்கும் மார்க்சிசத்தின் முழு விஞ்ஞான கருத்துருவும் தவறானவை என்றும் தொழிலாள வர்க்கத்தினை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர முன்னோக்கினை ஆதாரமாகக் கொள்வதில் பயனில்லை எனவும் கூற முன்வந்தனர். கீர்த்தி இந்தப் போக்குகளுக்கு எதிராகச் சளைக்காமல் போராடினார். அவர்கள் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே புரட்சிகர தலைமை அபிவிருத்தி செய்வது சாத்தியமில்லை எனவும் தொழிலாளர்கள் அவற்றை யிட்டு அக்கறையில்லை எனவும் தொழிலாளர் மார்க்சிசத்தின் அத்தியாவசியமான கருத்துக்களை விளங்கிக் கொள்ள முடியாது எனவும் கூறி வந்தனர். எமது நேரத்தை வீணாக்காமல் தொழிலாளர்களுக்கு கல்வி புகட்டுவது நேரத்தை வீணாக்குவதல்ல? நாம் ஏன் அதிகாரத்தைக் [illegible] எம்மை [illegible] விடக் கூடாது? என இந்த மத்தியதர வர்க்க ஓடுகாலிகள் கூறி வந்தனர்.

“இன்று நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முழு வரலாறும் இந்த கீழ்த்தரமான அடிபணிவுகளுக்கு எதிரான போராட்டங்களை — ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிராகவும் சரி ‘லேபர்’ இடதுசாரிகளுக்கு எதிராகவும் சரி — அடிப்படையாகக் கொண்டுள்ளது” என்றார்.

அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சி தோழி பாபரா சுலேட்டர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர் கீர்த்தி பாலசூரிய நினைவு நிதிக்கு 451 பவுண்கள் திரட்டப்பட்டது கூட்டம் அனைத்துலக கீதத்துடன் முடிவுற்றது.

## அமெரிக்க. . .

★ 3 ம் பக்கத் தொடர்ச்சி

லீக்கே’.

‘வேர்க்கஸ் லீக்’ டெட்ரொயிட்டில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் பரி போஸ்டர் கூறியதாவது

எமது தேர்தல் பிரச்சாரம் அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர இயக்கம் வெடிக்கும் என்ற நனவு ரீதியான எதிர்பார்ப்புடனேயே இடம் பெறுகின்றது. இலாப முறையின் உயிராபத்தான நெருக்கடியினால் முதலாளித்துவத்துக்கு எதிரான இந்த இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. எமது நோக்கம். இந்த இயக்கத்தினை புரட்சிகர மார்க்சிச வேலைத்திட்டத்தினால் ஆயுதபாணியாக்கி ஒரு புதிய புரட்சித் தலைமையை [illegible] எழுப்புவதன் மூலம் [illegible] வெற்றியை உறுதி செய்வதே” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமான் - செல்லச்சாமி துரோகத் தலைமை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை எதிர்க்கின்றது

யூ. என். பி. அரசாங்கம் மலையக தோட்டப் பகுதியில் உள்ள இளைஞர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து காலவரையறையின்றி சிறையில் அடைத்து வைத்திருப்பதற்கு எதிராக மலையக தொழிலாளர்கள் மத்தியில் பரந்த எதிர்ப்பு ஏற்பட்டு வருகின்றது. அண்மையில் இவர்களை விடுதலை செய்யுமாறு கோரி தலவாக்கொல்லையில் நடைபெற்ற உண்ணுவிரத எதிர்ப்பு இயக்கத்தில் 3000 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் தொழிலாளர்கள், தாய்மார்கள், யுவதிகள், இளைஞர்கள் அடங்குவர்.

யூ. என். பி அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இளைஞர்களை கைது செய்வதற்கு பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற இ. தொ. கா. வின் தொண்டமான், செல்லச்சாமி தலைமையானது இவ்வெதிர்ப்பு இயக்கம் சம்பந்தமாக பீதியடைந்துள்ளது. தலவாக்கொல்லை உண்ணுவிரதத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர் என்ற காரணங்காட்டப்பட்டு தலவாக்கொல்லை இ. தொ. கா. அமைப்பாளர் சந்திரசேகரனை இ. தொ. கா. வில் இருந்து வெளியேற்றியதன் மூலம் அவர்களின் பீதி வெளிப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் போராட்டங்களில் முன்னணிக் களமாக விளங்கிய தலவாக்கொல்லை பிரதசத்தில் உள்ள தொழிலாளர்களின் போராட்ட உந்துதலில் இழுபட்டுச் சென்ற சந்திரசேகரன் கடந்த காலத்தில் தொண்டமான், செல்லச்சாமி தலைமையுடன் இணைந்தவாறு யூ. என். பி அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து வந்தவரே ஆவர். இன்று இ. தொ கா. தலைமை அவருக்கு எதிராக எடுத்த நடவடிக்கையானது தொழிலாளர்கள் எத்தகைய சிறிய போராட்டத்தையும் யூ. என். பி. அரசாங்கத்துடன் இணைந்தவாறு இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க தயார் என்பதையே சுட்டிக் காட்டுகின்றது.

1987 ம் ஆண்டு மார்ச் மாதம் கண்டியில் நடைபெற்ற இ. தொ. கா. மகாநாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்ய இ. தொ. கா. போராட்டத்தில் இறங்க வேண்டும் என்பது தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது. இதனால் மகாநாட்டுக்கு சமூகமளித்த ஜயவர்தனவிடம் ''இளைஞர்களை விடுதலை செய்து எங்களுக்கு உதவினால், நாங்கள் இளைஞர்களை கட்டுப்படுத்துவோம் என்று தொண்டமான் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு ஜயவர்தன பின்வருமாறு பதிலளித்தார்: ''நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும், நிலைநாட்டுவது பொலிசாரின் கடமை அவர்களின் கடமையில் நான் தலையிட முடியாது'' என்றார்.

இந்நிலைமையிலும் ஜயவர்தனவின் செருப்பை நக்கியவாறு யூ. என். பி. அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து வரும் தொண்டமான், செல்லச்சாமி தலைமை மலையக இளைஞர்களை கைது செய்வதற்கு பொலிசாருக்கு உதவி வருகின்றனர். அண்மையில் இ. தொ. கா. தலைவர் ஒருவர் இரு இளைஞர்களை பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார்.

வட — கிழக்கில் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு பூரண ஆதரவை வழங்கி வரும் இ. தொ. கா தலைமையானது இப்பொழுது மலையகத் தொழிலாளர்களுக்கு எதிராக திரும்பியுள்ளது

மலையகத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையை யூ. என். பி. அரசாங்கத்துடன் இணைந்து பெற்றுத்தருவோம் என்ற நப்பாசையை ஊட்டியவாறு 10 வருடங்களுக்கு மேலாக யூ. என். பி. அரசாங்கம் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதற்கு உதவி வருகின்ற இ. தொ. கா. தலைமையானது இன்று பிரஜாயுரிமை பிரச்சினையை இழுத்தடித்து தொழிலாளர்களின் கண்ணில் மண்ணைத் தூவி வருகின்றது மாத்திரமல்ல தொழிலாளர்களின் போராட்டத்தினை நசுக்குவதற்கான ஆயுதமாகவும் மாறியுள்ளனர்

இன்று மலையகத் தொழிலாளர்கள் இ. தொ. கா. தலைமையின் காட்டிக் கொடுப்புக்கு எதிராக சுயாதீனமாக தலையிட ஆரம்பித்துள்ளார்கள் இதனையே இ. தொ கா. அங்கத்தவர்கள் தலைமையின் தடையுத்தரவையும் மீறி அண்மையில் சம்பள உயர்வு கோரி நடைபெற்ற வேலை நிறுத்தத்திலும் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு நடைபெற்ற போராட்டத்திலும் பங்கு பற்றியது எடுத்துக் காட்டுகின்றது.

இந்நிலையில் யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து இ. தொ. கா. வை வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கவும், தொண்டமான், செல்லச்சாமி தலைமையை இ. தொ. கா வில் இருந்து வெளியேற்றவும் விசேட மகாநாட்டை கூட்டுவதற்கான பிரசாரத்தை தொழிலாளர்கள் ஆரம்பிக்க வேண்டியது தீர்க்கமாகியுள்ளது

இந்த முன்னேக்கின் அடிப்படையிலேயே முதலாளித்துவ கட்சிகளில் இருந்து தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணிதிரட்ட முடியும். இதன் மூலமே அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், தொழிலாளர்களின் பிரஜாவுரிமையை வழங்க வல்லதுமான தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்க முடியும்.

இத்தகைய வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடி வரும், ஒரேயொரு இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சகல தொழிலாளர் போராளிகளும் இணைந்து இப்போராட்டத்தை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்

## மக்கள் முன்னணியை நிராகரி!

★ 7 ம் பக்கத் தொடர்ச்சி

பக்கபலத்தையும், முதலாளித்துவ மக்கள் கட்சியுடன் தொடுத்துள்ள கூட்டையும் தகர்த்து இந்திய — இலங்கை ஒப்பந்தத்தையும் இந்தியப் படை ஆக்கிரமிப்புக்கு வழங்கும் ஆதரவையும் நிறுத்தி விட்டு யூ. என். பி. அரசாங்கத்தை விரட்டி விட்டு தொழிலாள விவசாய அரசாங்கத்தை ஆட்சியேற்றுமாறு ல. ச. ச. கட்சி — கம்யூனிச — இ. தொ. கா. தலைமைகளை நிர்ப்பந்திக்குமாறு தொழிலாள வர்க்கத்தை நாம் கோருகின்றோம். இந்தியப் படையை வாபஸ் பெற செல்வதும், தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் போராடி தமிழ் ஈழ தேசத்தினதும் — இந்திய தொழிலாள வர்க்கத்துடனும் ஐக்கியத்தை நிலைநாட்டப் போராடுமாறும் நாம் கோருகிறோம்.

தொழில் வாழ்க்கைத் தரம் தொழிற்சங்க உட்பட்ட உரிமைகளைப் பேணவும் அரச அடக்கு முறைக்கு எதிராக வேலை நிறுத்தம், தொழிற்சாலைகளுள் அமர்ந்து கொள்ளல், மறியல் போராட்டம் உட்பட்ட வர்க்க செயற்பாடுகளை தயாரிக்கவும் ஈழதேசத்தில் இருந்து இந்திய படையை வாபஸ் பெறுவிப்பதையும். அடிப்படை கொண்ட பொது வேலை நிறுத்தம் வரை அதனை அணிதிரட்டி விட போராடுமாறும் நாம் தொழிலாள வர்க்கத்தை கோருகின்றோம். இப்போராட்டத்தின் போது யூ. என். பி., சி. ல. சு. கட்சியின் குண்டர் படைகளையும், அரச படையணிகளையும் எதிர்கொள்ளும் பொருட்டு தமது பாதுகாப்பு கட்டி எழுப்புவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் சகலவற்றிற்கும் மேலாக தொழிலாளரதும் வறிய விவசாயிகளதும் ஆட்சியை ஒருங்கிணைந்து அணி திரட்டும் பொருட்டு சோவியற் சபைகளை கட்டி எழுப்ப வேண்டும்

யூ. என். பி. அரசாங்கத்தை விரட்டி, இந்திய முதலாளித்துவத்தின் எதிர்ப்புரட்சிகர தலையீட்டையும் ஏகாதிபத்திய ஒடுக்குதலையும் தகர்த்து, தமிழ் ஈழ தேசியத்தின் தேசிய உரிமைக்காக விவசாயிகளது ஒடுக்கு முறையை அகற்றும் ஜனநாயக செயற் திட்டத்திற்கும், தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளை பேணுவதற்கு சகல ஏகாதிபத்திய முதலாளித்துவ சொத்துடைமைகளை தொழிலாள வர்க்க ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கி விடும் சோசலிச வேலைத்திட்டத்தை செயற்படுத்த தொழிலாள விவசாய அரசாங்கத்தை நோக்கி முன்னேறுவது, அவ்வரசியல் போராட்டத்தினால் மட்டுமே சாத்தியமாகும்

இம் முன்னோக்கினை சமர்ப்பிக்கும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு சகல தொழிலாளர்களிடமும ஒடுக்கப்படுவோரிடமும் நாம் கோருகின்றோம்.

## கீர்த்தி பாலசூரிய. . .

★ 1 ம் பக்கத் தொடர்ச்சி

முன்னணியுடனும் அணி வகுத்து நிற்பது சுட்டிக் காட்டுவது என்னவென்றால் சோஷலசப் புரட்சிக்கு தலைமை கொடுக்கக் கூடிய ஒரேயொரு இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டும் என்பதேயாகும்.

ரூ. 250 000 ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இலங்கையின் தொழிலாள வர்க்கம் புதிய போராட்டங்களுக்கு முன்வந்திருக்கும் நிலைமையிலேயாகும். தமிழ் ஈழத்தில் தொழிலாள வர்க்கம், இந்திய ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து விடுதலை பெற சிறீலங்கா தொழிலாள வர்க்கத்தின் ஆதரவை வேண்டமுன் வந்துள்ள இம் முக்கியமா அபிவிருத்தியின் மத்தியிலேயே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தலைமை கொடுக்க வேண்டிய முக்கிய பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளது இந்நிதியை திரட்டி நாங்கள் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டம் மிகவும் முக்கியமானது.

இந்நிதியை திரட்டுவதற்காக எதிர்வரும் கிழமைகளில் தீர்க்கமாக தலையிடுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களையும்' இளம் சோஷலிஸ்டுகளையும் நாங்கள் வேண்டுகின்றோம். 'கம்கறு மாவத்த' 'தொழிலாளர் பாதை' வாசகர்களினதும், பு. க. க. நண்பர்களினதும் தும் கூடிய பட்ச உதவியையும் வேண்டுகின்றோம். தொழிலாளர்களே, ஒடுக்கப்படும் மக்களே உங்கள் வீடுகளுக்கும், வேலைத்தலத்திற்கும் வரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவருக்கு கூடிய பட்ச ஆதரவை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

உங்களுடைய நிதியை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ஆனந்த வக்கும்புற,
இல. 90. 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, மருதானை
கொழும்பு — 10

## சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு - 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்குமபுறவினால் மஹரகம
நாவலவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org